[1995 மார்ச் 20

77—

நாகலாபுரத்தில் பேருந்து நிலையம் அமைத்தல்.

*19773—**திருமதி என். கனகவல்லி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விளாத்திகுளம் தொகுதி, நாகலாபுரத்தில் பேருந்து நிலையம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திருமதி என். கனகவல்லி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளம் தொகுதியில் அமைந்துள்ள நாகலாபுரத்தில் நாகலாபுரம்- புதூர்- அருப்புக்கோட்டை மார்க்கமாக கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக 13 பேருந்துகள் 80 சிங்கிளும், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக 1 பேருந்து 2 சிங்கிளும், பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக 2 பேருந்துகள் 12 சிங்கிளும்; தனியார் மூலமாக 17 பேருந்துகள் 80 சிங்கிளும் மற்றும் நாகலாபுரம்-இருப்பம்குடி மார்க்கமாக மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக 2 பேருந்துகள் 4 சிங்கிளும்; பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக 3 பேருந்துகள் 18 சிங்கிளும், கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக 2 பேருந்துகள் 8 சிங்கிளும், தனியார் மூலமாக 6 பேருந்துகள் 24 சிங்கிளும் ஆக மொத்தம் நாகலாபுரம் மார்க்கமாக 46 பேருந்துகள் 254 சிங்கிள் இயக்கப்படுவதால் வளர்ந்து வருகின்ற நகரமாக நாகலாபுரம் இருப்பதாலும், மக்கள் போக்குவரத்து அதிகமாக இருப்பதாலும், வியாபாரிகள் அதிகமாக வாழ்கின்ற பகுதியாக இருப்பதாலும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய புனித ஆட்சியில் அங்கு ஒரு பேருந்து நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

1995 மார்ச் 20]

முற்பகல் 11-05

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பஸ் போக்குவரத்துப் புள்ளிவிவரங்கள் சரியாக இருக்கலாம். ஆனால் இன்றைக்கு நாகலாபுரம் கிராமத்திலே பேருந்து நிலையம் அமைப்பதற்காக அங்கே இருக்கிற ஊராட்சிக்குச் சொந்தமாகவோ அல்லது அரசுக்குச் சொந்தமான எந்தவிதமான வசதியான புறம்போக்கு நிலங்களோ அங்கே இலலை. அங்கே பஸ் நிலையம் அமைப்பதற்காக ஒரே ஒரு ஊரணி மட்டும் இருக்கிறது. ஊரணியை மூடினோம் என்று சொன்னால் அங்கே இருக்கிற நிலத்தடி நீர் பாதிக்கும். அப்படியே அதை எடுத்து செய்யவேண்டுமென்று சொன்னாலும்கூட இன்றைக்கு அந்த ஊரணியை மூடுவதற்கு சுமார் 30 இலட்சம் ரூபாய் செலவிடப்பட வேண்டியிருக்கிறது. அங்கே நிதி ஆதாரம் அந்த அளவுக்கு இல்லாத காரணத்தினாலே தற்போது அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

திருமதி என். கனகவல்லி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகலாபுரத்தில் உள்ள சாலைகளின் இருமருங்கிலும் போக்குவரத்தின் மூலமாக இயக்கப்படுகின்ற அந்தப் பேருந்துகள் நிறுத்தி வைக்கப்படுவதால் மற்ற பேருந்துகள் செல்ல இடையூறாகவும் மக்கள் நடமாட்டத்திற்கு மிகவும் இடையூறாக அமைந்துள்ளதாலும் அந்தப் பகுதியில் வாழ்கின்ற மக்களின் நலனைக் கருதி, தனியாருடைய நிலத்தை ஆர்ஜிதம் செய்து அங்கே ஒரு பேருந்து நிலையம் அமைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே இருக்கிற, தனியாருக்குச் சொந்தமான நிலங்கள் யாவும் காலி மனைகளாக இன்றைக்கு லே அவுட் செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவே, ஆர்ஜிதம் செய்கின்ற நடவடிக்கையும் அதனால் தடைபடுகிறது. ஆர்ஜிதம் செய்கிறபொழுது வழக்காடு மன்றத்திற்குச் சென்று தடையாணை பெற்று பல்வேறு வருடங்கள் காத்திருக்கிற சூழ்நிலை இருக்கிறது. இருந்தாலும் அங்கே இருக்கிற தேவையைக் கருத்திலே கொண்டு, அரசு மீண்டும் பரிசீலனை செய்து அதற்குண்டான நிலத்தைத் தேர்வு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 78, திருமதி ஜீனத் சர்புதீன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.